[28th March 1963

*Dispensary (Morappur Block)*

* 410 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to open a Rural Dispensary in Kambainellur Village in Morappur Block in Salem district; and

(*b*) if so, when?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) கிராம மருத்துவச் சாலை ஏற்படுத்துவது மொரப்பூர் பஞ்சாயத்து யூனியனின் பொறுப் பாகும். இதற்கான திட்டம் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** ஸார், இது பஞ்சாயத்து யூனியன் பணி என்று எனக்கு நன்றாகத் தெரியும். இருந்த போதிலும் கிராமவாசிகள் பஞ்சாயத்து யூனியனை அணுகி பயன் பெறாத காரணத்தால், அரசாங்கத்தை அணுகி இருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் இந்த விஷயத்தை நேரடியாகக் கவனித்து ஆவன செய்ய முயற்சி எடுக்குமா அல்லது பஞ்சாயத்து யூனியன் களுக்கு அறிவுரை வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** பஞ்சாயத்து யூனியன் கள் எந்தக் காரணத்தைக்கொண்டு மறுத்து இருக்கிறார்கள் என் பது அரசாங்கத்துக்குத் தெரியாது. இதை அவர்கள் ஒரு ரெசலி யூஷன் மூலமோ அல்லது பஞ்சாயத்து மூலமோ அரசாங்கத்துக்குத் தகவல் கொடுத்தால் இதைப்பற்றி முயற்சி எடுத்துக்கொள்ள முடியும்.

*Fire accident (aid to victims)*

* 411 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether it is a fact that the North Salem District Development Council has recommended for the enhancement of the aid given to the victims of fire accident from Rs. 30 to Rs. 75 for the construction of sheds; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) In July 1961, the question regarding the adequacy of the existing scale of relief of Rs. 30 which was given from 1954 was examined and it was held that the scale of relief was adequate. The question has again been examined by Government with reference to the recommendation of the North Salem District Development Council and they have decided that no enhancement is necessary.